2026 பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – வசந்தா |
| கணவர் பெயர்: | பாண்டி |
| ஊர்: | சடையால்பட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 64 |

04.02.2026

(எதிரி நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசார் திரு.நாச்சிமுத்து, சிறப்பு சார்பு ஆய்வாளர், பழனிசெட்டிபட்டி அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தேனி மாவட்டம், சடையால்பட்டி, எஸ்.வாடிப்பட்டியில் வசித்து வந்தேன். நான் தற்போது திண்டுக்கல்லில் எனது மகளுடன் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 30.11.2024 ம் தேதியன்று சடையால்பட்டியில் காலை 07.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தேன். அப்போது, எனது பேரன் கோபிநாத் என்னிடம் வந்து, எனது பேரனுடைய செல்போனை எதிரி ஜெயபால் பிடிங்கி சென்றதாக சொன்னார். எதிரி ஜெயபால் அவருடைய வீட்டின் முன்பு இருந்தார். நான்

அவரிடம் சென்று, என்னுடைய பேரனுடைய செல்போனை எனது பேரனிடம் கொடு என்று கேட்டேன். அதற்கு அவர் அசிங்கமாக தகாத வார்த்தைகளால் பேசினார். செல்போனை அவர் கீழே போட்டுவிட்டார்.

2. எதிரி ஜெயபால் என்பவர் கல்லை என்மீது எறிந்தார். அந்த கல் எனது வலது மணிக்கட்டில்பட்டு எனக்கு காயம் ஏற்பட்டவுடன் எனக்கு மயக்கமாக வந்தது. எனது கணவர் பாண்டி ஓடிவந்து, ஏன் இவ்வாறு தாக்குகிறாய் என்று கேட்டதற்கு, எதிரி ஜெயபால் வேகமாக ஓடிவந்து, தேவுடியா மகனே, அவுசாரி மகளே என்று அசிங்கமாக திட்டி, எதிரியின் வீட்டிலிருந்து கத்தியை எடுத்துவந்து, எனது கணவர் பாண்டியின் கழுத்தை இறுக்கி, அவர் வைத்திருந்த கத்தியால் பாண்டியின் இடது மார்பு பக்கத்திலும், இடதுப்புற விலா எலும்பிலும் மாறி மாறி குத்தினார். காயத்தினால் எனது கணவருக்கு இரத்தம் வந்து, மயக்கமாகிவிட்டார்.

3. சம்பவம் நடந்தபோது, எனது பேரன் கோபிநாத், நான், எனது கணவர் ஆகியோரும் இருந்தோம். சத்தம் கேட்டு ஊர்க்காரர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். என்னையும், எனது கணவரையும் அருகிலிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸில் ஏற்றி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நானும், எனது கணவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம், எனது கணவர் சுமார் 15 நாட்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டார். மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றப்போது, போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் விபரங்கள் சொல்லச் சொல்ல எனது மகள் நாகலட்சுமி புகாரை எழுதினார். புகாரில் நான் கையொப்பம் செய்தேன், என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அது **அ.சா.ஆ.1**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மகள் சாட்சி கையொப்பம் செய்தார்.

4. சிகிச்சை முடித்து வீட்டிற்கு அழைத்து வந்த பின்பு எனது கணவர் உடல்நிலை பாதிக்கப்பட்டு தான் இருந்தார். அவரை அவ்வபோது

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்து வந்தோம். சுமார் 2 1/2 மாதங்களுக்கு முன்பு எனது கணவர் இறந்துவிட்டார். எதிரி ஜெயபால் எனது கணவரை குத்திய கத்தியின் நீளம் 3/4 முழம் நீளம் இருக்கும். என்னிடம் காட்டப்படும் கத்தியை கொண்டு தான் எதிரி எனது கணவரை குத்தினார். அது **சா.பொ.1–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தின்போது எனது கணவர் வெள்ளை நிற பனியன் அணிந்திருந்தார். எதிரி குத்தியப்பின்பு பனியனில் இரத்தக்கறை படிந்திருந்தது. என்னிடம் காட்டப்படும் இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற பனியன் (1), எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்ததாகும். அது **சா.பொ.2–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சம்பவம் வீட்டிலிருந்து 10 அடி தள்ளி பிரதான சாலை அருகே நடைபெற்றது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

5. சம்பவ சமயத்தின்போது நான் எந்த ஊரில் வசித்து வந்தேன் என்றால் சடையால்பட்டியில் வசித்து வந்தேன். எனது கணவர் இறந்தபின்பு எனது மகளுடன் திண்டுக்கலில் வசித்து வருகிறேன். சம்பவத்தின்போது எனது மகள் திண்டுக்கலில் வசித்து வந்தார் என்றால் சரிதான், நாங்கள் தொலைபேசியில் அளித்த தகவலின்பேரில் எனது மகள் எங்களை பார்க்க வந்தார். சம்பவத்தின்போது யார் யார் உடனிருந்தனர் என்றால் சம்பவத்தின்போது இல்லை, நாங்கள் கத்தி கூச்சலிட்டப்போது, பொம்மையசாமி, கார்த்திக் ஆகியோர் வந்தார்கள். 108 ஆம்புலன்ஸில் எங்களை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கு முன் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை.

6. எதிரி ஜெயபால் வீடும், எனது வீடும் அடுத்தடுத்த வீடு என்றால் சரியல்ல, எதிர் எதிர் வீட்டில் வசித்து வருகிறோம். சம்பவத்திற்கு முன்பு எதிரி ஜெயபாலுக்கும் எனக்கும் புகை மூட்டல் சம்பந்தமாக பிரச்சனை இருந்துவந்ததால் அவர்மீது நான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த

புகாரின் அடிப்படையில் வீட்டிற்கு வெள்ளை அடித்து கொடுக்கும்படி பேசி முடித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. புகை மூட்டும் சம்பவத்தின்போது எதிரியின் கைப்பேசி உடைந்துவிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் கைப்பேசி உடைந்துவிட்டதை நாங்கள் சரிசெய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல. கைப்பேசி சரிசெய்வது விசயமாக தான் எதிரி எனது கணவரிடம் பேசினார் என்றால் சரியல்ல, அதற்கும் சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை.

7. எனது கணவருக்கு சம்பவத்திற்கு முன்பு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது என்றாலும், அதற்கு அவர் ஆஞ்சியோபிளாஸ்ட் சிகிச்சை எடுத்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்பு எனது மகள் காலை 10.00 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார். சம்பவம் நடந்தபோது, எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் பொம்மையசாமி மற்றும் கார்த்திக் மட்டும் இருந்தார்கள், மற்றவர்கள் வேலைக்கு சென்றுவிட்டனர். 108 ஆம்புலன்ஸில் அவர்கள் இருவரும் எங்களுடன் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் நாங்கள் மருத்துவமனைக்கு சென்றவுடன் சிகிச்சையிலிருந்தபோது, சுமார் 11 மணியளவில் போலீசார் மருத்துவமனைக்கு வந்தார்கள்.

8. எனது கணவர் 2 மாதங்களுக்கு முன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரித்தப்போது எனது கணவர் சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரியல்ல, மயக்கத்தில் இருந்தார். போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தப்போது யார் யார் உடனிருந்தனர் என்றால் எனது தெருவில் இருக்கும் ஆண்நபர்கள் இருந்தார்கள், பெயர் எனக்கு ஞாபகமில்லை. நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எனது கணவர் தான் எதிரியை வெட்ட வந்தார் என்றாலும், அதற்கு பயந்துக்கொண்டு எதிரி வீட்டிற்குள் ஓடினார் என்றாலும்,

எனது கணவர் எதிரியை வெட்ட வந்தப்போது, எனது கணவரின் கால்தடுக்கி கீழே விழுந்ததில் எனது கணவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவ சமயத்தில் எதிரியிடம் எந்த கத்தியும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ தேதி 30.11.2024 ம் தேதி என்றால் சரிதான்.

9. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், ஏற்கனவே நடந்த புகைமூட்டல் வழக்கு சம்பவத்தை காரணமாக கொண்டு, இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த சம்பவதத்திற்கு 1 1/2 வருடங்களுக்கு முன்பு அந்த சம்பவம் நடந்திருக்குமா என்றால் சுமார் 4 வருடங்கள் இருக்கும். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்த பின்பு எத்தனை விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் விசாரித்தார்கள். எனது கணவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு, ஆஞ்சியோபிளாஸ்ட் சிகிச்சை அளித்ததால் அவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. ஆஞ்சியோபிளாஸ்ட் சிகிச்சை அளித்தவுடன் அவர் நன்றாக இருந்தார், இந்த சம்பவத்திற்கு பின்னிட்டு தான் உடல்பாதிப்புடன் வாழ்ந்து வந்தார். நான் சொன்னவாறு எனது மகள் புகார் எழுதவில்லை என்றாலும், அந்த சமயத்தில் அங்கு நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றாலும், அவர்கள் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றாலும் சரியல்ல, நான் சொல்ல சொல்ல எனது மகள் எழுதினார்.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.04 17:58:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
04.02.2026

2026 பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – நாகலட்சுமி |
| கணவர் பெயர்: | மகேஷ்குமார் |
| ஊர்: | திண்டுக்கல் |
| வட்டம்: | திண்டுக்கல் |
| மாவட்டம்: | திண்டுக்கல் |
| தொழில்: | Track Maintainer, Railway Department |
| வயது : | 38 |

04.02.2026

(எதிரி நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசார் திரு.நாச்சிமுத்து, சிறப்பு சார்பு ஆய்வாளர், பழனிசெட்டிபட்டி அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

1. நான் தற்சமயம் திண்டுக்கலில் Railway துறையில் பணியாற்றி வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். இவ்வழக்கில் காயம்பட்ட பாண்டி என்பவர் எனது தந்தையாவார். என்னுடைய பெற்றோர்கள் சடையால்பட்டியில் வசித்து வருவதால் எனது பிள்ளைகள் கோபிநாத், ஜனரஞ்சனி ஆகியோர்களை அவர்களுடன் வசித்து வந்து, படித்துக்கொண்டிருந்தார்கள். கடந்த 30.11.2024 ம் தேதியன்று நான் திண்டுக்கலில் இருக்கும்போது, சுமார் காலை 07.30 மணியளவில் எனது மகன் கோபிநாத் எனக்கு தொலைபேசி மூலமாக அழைத்து,

ஆஜர் எதிரி ஜெயபால் தாத்தாவை கத்தியால் குத்திவிட்டதாகவும், அம்மாச்சிக்கு எதிரி கல்லை எடுத்து எறிந்ததில் வலதுகை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டதாகவும் கூறினார். ஆஜர் எதிரி ஜெயபால் ஆவார்.

2. தகவல் கேட்டவுடன் நானும், எனது கணவரும் கார் மூலமாக தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு வந்தோம். நான் வந்து பார்த்தப்போது, எனது தாயார் Stretcher–ல் உட்கார்ந்திருந்தார், வலது முன்கையில் இரத்தம் கசிந்து கட்டுப்போட்டு இருந்தார். எனது தந்தை அவசர சிகிச்சை பிரிவில் இருந்தவரை பார்த்தேன், அவருக்கு உடல் முழுவதும் உடல் கசிந்து சுயநினைவு இல்லாமல் இருந்தார். அவருக்கு இடது மார்பு பகுதியில் கத்திக் குத்து காயங்கள் இருந்தன. இடது பின்புற பகுதியில் கத்திக் குத்து காயங்கள் இருந்தன. மருத்துவர்கள் எனது தந்தைக்கு சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தார்கள். போலீசார் சுமார் 11.00 மணியளவில் மருத்துவமனைக்கு வந்தார்கள். எனது தாயார் புகார் எழுதச் சொன்னார். அவர் சொல்ல சொல்ல நான் புகாரை எழுதினேன்.

3. போலீசார் வந்தவுடன் புகாரை கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1–ல் நான் எழுதியதும், சாட்சியாகவும் கையொப்பம் இட்டுள்ளேன், எனது தாயாரும் கையொப்பம் இட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1–ல் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான், அது **அ.சா.ஆ.2–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் விபரங்களை நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது தந்தை க.விலக்கு அரசு மருத்துவமனையில் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவந்தார். எனது தந்தை இறந்து சுமார் 2 1/2 மாதங்கள் ஆகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

4. எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் எனது மகன் கோபிநாத் தகவல் சொன்னார், அப்போது சுமார் 7.30 மணி இருக்கும். எனது தந்தையின் கைப்பேசியிலிருந்து எனது மகன் எனது கைப்பேசிக்கு அழைத்து தகவல்

சொன்னார். எனது தந்தையின் தொலைபேசி எண் 9791637943 ஆகும். அவ்வாறு தகவல் சொன்னபோது எங்கு இருப்பதாக சொன்னார் என்றால் என் மகன் ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாகவும் கூறினார், என்னை மருத்துவமனைக்கு வரச் சொன்னார். மகனை தவிர வேறு யாரும் எனக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவமனைக்கு யார் யார் வந்தோம் என்றால் நானும், எனது கணவரும் காரில் வந்தோம்.

5. எனது கணவர் என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் எலக்ட்ரீசியன் வேலை பார்த்து வருகிறார். எனது கணவரின் பெயர் மகேஷ்குமார் ஆகும். எனது தாயார் புகாரை எழுதுவதற்கு சொன்னப்போது எனது கணவரும் உடனிருந்தார் என்றால் சரிதான். புகார் எழுதும்போது சமயம் எத்தனை இருக்கும் என்றால் 10.30 மணி இருக்கும். அ.சா.ஆ.1 புகார் மனுவில் எனது கையொப்பம் மற்றும் எனது தாயார் கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரை போலீசார் முன்னிலையில் எழுதினேனா என்றால் இல்லை, அவர்கள் வருவதற்கு முன்பே எழுதி வைத்திருந்தேன். நான் செல்வதற்கு முன்பு போலீசார் எனது தாயாரிடம் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

6. புகார் எழுதும்போது நான், எனது கணவர், எனது தாயார் தவிர வேறு யார் இருந்தார்கள் என்றால் ஊர்க்காரர்கள் கார்த்திக், பொம்மையசாமி மற்றும் ராஜ் இருந்தார்கள். புகார் எழுதும்போது எனது மகன் உடன் இருந்தார் என்றால் சரிதான். வழக்குச் சம்பந்தமாக எனது மகனிடமிருந்து எதிரி பிடுங்கியதாக சொல்லப்படும் கைப்பேசியிலிருந்து எனது மகன் எனக்கு தகவல் சொன்னார் என்றால் சரியல்ல, வேறொரு கைப்பேசியிலிருந்து பேசினார். அந்த கைப்பேசி எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சம்பவத்தில் சொல்லப்படும் கைப்பேசியிலிருந்து எனது மகன் எனக்கு பேசினார் என்றாலும், வழக்கிற்காக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஏற்கனவே எதிரிக்கும் எனது பெற்றோருக்கும் இடையே புகை மூட்டல் சம்பந்தமாக பிரச்சனை இருந்துவந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

7. அந்த சம்பவம் எத்தனை வருடங்களுக்கு முன் நடந்தது என்றால் சுமார் 2 வருடங்கள் இருக்கும், சரியாக ஞாபகமில்லை. புகை மூட்டல் சம்பவத்தின்போது எதிரியின் கைப்பேசி உடைந்துவிட்டதால் அதை எனது தாயார் சரிசெய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தைக்கு வழக்குச் சம்பவத்திற்கு முன்பு ஆஞ்சியோபிளாஸ்ட் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான், ஆஞ்சியோபிளாஸ்ட் செய்து சுமார் 5 வருடங்கள் இருக்கும். வழக்கு சம்பவத்திற்கு பின்பு இருதய நோய்க்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரியல்ல, இரத்த அழுத்த நோய்க்கு மாத்திரை எடுத்துக்கொண்டிருந்தார், சம்பவத்தின்போது ஏற்பட்ட கத்திக் குத்திற்காக அடிக்கடி மருத்துவமனை சென்று சிசிக்சை பெற்றுவந்தார். உண்மையில் நான் சொன்னதுபோல் அ.சா.ஆ.1 புகார் மனுவை நான் எழுதவில்லை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்பும் எனது தந்தை இருதய நோய்க்கு மாத்திரை எடுத்துவந்தார் என்றால் சரியல்ல.

8. எனது தந்தைக்கு வயது 71 இருக்கும். எனது தந்தை வயது மூப்பின் காரணமாகவும், இருதய நோய் சம்பந்தமாகவும் தான் இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல, சம்பவத்திற்கு பின்னிட்டு அவருக்கு சரியாக உணவு உண்ண முடியாமல், பழச்சாறு மட்டுமே அருந்தி வந்தார். உண்மையிலேயே நான் சொல்வதுபோல் நான் புகார் மனுவை எழுதியிருந்தால் மருத்துவமனையிலிருந்த எனது கணவரோ, மற்ற ஊர்க்காரர்களோ கையொப்பம் இட்டிருப்பார்கள் என்றாலும், அவ்வாறு நான் புகார் எதுவும் எழுதாததால் அவர்கள் கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்த சம்பவத்தின் தொடர்ச்சியாக

காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த வழக்கை தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரியால் எனது தந்தைக்கும் தாய்க்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.04 17:58:39 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
04.02.2026

2026 பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – கோபிநாத் |
| தகப்பனார் பெயர்: | மகேஷ்குமார் |
| ஊர்: | திண்டுக்கல் |
| வட்டம்: | திண்டுக்கல் |
| மாவட்டம்: | திண்டுக்கல் |
| தொழில்: | மாணவன் |
| வயது : | 14 |

04.02.2026

(எதிரி நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

1. உன் பெயர் என்ன? எனது பெயர் கோபிநாத்

2. இது எந்த இடம் என்று உனக்கு தெரியுமா? நீதிமன்றம்

3. உன் தந்தை பெயர் என்ன? மகேஷ்குமார்

4. உன் தாயார் பெயர் என்ன? நாகலட்சுமி

5. உனக்கு முன்னால் சாட்சியம் அளித்தவர்கள் யார்? எனது தாயாரும், எனது அம்மாச்சியும் ஆவார்கள்.

6. நீ எந்த வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறாய்? 8 ம் வகுப்பு

7. உன் வயது என்ன? 14

8. நான் யார் என்று தெரியுமா? தெரியும், நீதிபதி

9. எதற்காக இந்நீதிமன்றம் வந்திருக்கிறாய்? எனது தாத்தாவை ஜெயபால் என்பவர் குத்திவிட்டார், அதற்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன்.

சாட்சி மேற்சொன்ன கேள்விகளுக்கு நிதானத்துடனும், நல்ல நிலையிலும் பதில் அளித்தார்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்சமயம் திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கலில் எனது பெற்றோர்களுடன் வசித்து வருகிறேன். திண்டுக்கல் செல்வதற்கு முன்பு தேனி மாவட்டம், சடையால்பட்டியில் வசித்து வந்தேன். சடையால்பட்டியில் எனது தாத்தா பாண்டியன், பாட்டி வசந்தா, அக்கா ஜனரஞ்சனியுடன் வசித்து வந்தேன். நானும் எனது அக்காவும் பள்ளிக்கு சென்றுக்கொண்டிருந்தோம். கடந்த 30.11.2024ம் தேதி காலை 07.30 மணியளவில் நான் எனது பாட்டி வீட்டில் இருந்தேன். நான் சாலையில் எனது வீட்டிற்கு நடந்து வந்துக்கொண்டிருந்தேன், அப்போது ஆஜர் எதிரி ஜெயபால் என்பவர் நான் வைத்திருந்த எனது தாத்தாவின் Vivo செல்போனை பிடுங்கிவிட்டார், நான் நடந்த விசயத்தை சமயலறையில் இருந்த எனது பாட்டியிடம் சென்று கூறினேன்.

2. எனது பாட்டி வீட்டிலிருந்து வெளியே வந்து, ஜெயபாலின் வீட்டின் முன்பு நின்றுக்கொண்டிருந்த ஜெயபாலிடம் ஏன் நான் வைத்திருந்த கைப்பேசியை பிடுங்கினாய், ஆன்லைன் வகுப்பை அட்டெண்ட் செய்ய வேண்டும் என்று கூறினார், அப்போது நான் உடனிருந்தேன். அப்போது எங்களது கைப்பேசியை எறிந்துவிட்டார். பாட்டி ஏன் கைப்பேசியை எறிந்தாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி பாட்டியை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவர் கல்லை எடுத்து பாட்டியின் மீது எறிந்தார். அவ்வாறு எறிந்தபோது, பாட்டியின் வலது கை மணிக்கட்டில் கல்பட்டு, பாட்டிக்கு இரத்தக்காயமும் வீக்கமும் ஏற்பட்டது. அப்போது பாட்டி கத்தினார், அதன்

தொடர்ச்சியாக எனது தாத்தா வந்து எதிரியிடம் ஏன் கல்லை எடுத்து எறிந்தாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கழுத்தைப் பிடித்து, இடது மார்பிலும், இடது விலா எலும்பில் கத்தியால் குத்தினார்.

3. என் தாத்தாவிற்கு இரத்தம் வந்து, மயக்கமாகிவிட்டார், ஊர்க்காரர்கள் வந்தார்கள். ஊர்க்காரர்கள் எதிரியிடம் ஏன் கத்தியால் குத்தினாய் என்று கேட்டதற்கு கத்தியை காண்பித்து ஊர்க்காரர்களிடம் நீங்கள் அருகில் வந்தால், உங்களையும் கத்தியால் குத்திவிடுவேன் என்று கத்தியை காண்பித்து மிரட்டினார். ஊர்க்காரர்கள் வந்தவுடன் எதிரி ஓடிவிட்டார். அங்கிருந்த ஊர்க்காரர்கள் 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் சொல்லி, க.விலக்கு மருத்துவமனைக்கு காயம்பட்ட எனது தாத்தா, பாட்டியை நான் அழைத்து சென்றேன். ஊர்க்காரர்கள் யாரும் 108 ஆம்புலன்ஸில் வரவில்லை. சம்பவம் குறித்து நான் எனது பெற்றோருக்கு என் கைப்பேசியிலிருந்து தொடர்பு கொண்டு தகவல் சொன்னேன்.

4. மருத்துவமனையில் நாங்கள் இருந்தபோது, எனது பெற்றோர்கள் காலை 09.30 மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார்கள். நடந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள், நான் சம்பவத்தை பற்றி கூறினேன். எனது தாத்தா மருத்துவமனையில் சுமார் 15 நாட்கள் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். பாட்டி இரண்டு நாட்கள் சிகிச்சையில் இருந்தார். எனது தாத்தா பாண்டி சுமார் 2 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 கத்தி தான் ஆஜர் எதிரி ஜெயபால் எனது தாத்தாவை குத்திய கத்தியாகும். சம்பவத்தின் சமயத்தில் எனது தாத்தா வெள்ளை நிற பனியன் அணிந்திருந்தார், என்னிடம் காட்டப்படும் சா.பொ.2 இரத்தக்கறை படிந்த பனியன் என் தாத்தாவினுடையதுதான்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

5. எனது தாத்தாவின் தொலைபேசி எண் 9791637943 ஆகும்.

என்னுடைய மொபைல் எண் எனக்கு ஞாபகமில்லை. நான் பயன்படுத்திவந்த கைப்பேசியில் சிம் கார்டு இருந்ததா என்றால் இருந்தது. வழக்கமாக ஆன்லைன் வகுப்பு யாருடைய கைப்பேசியிலிருந்து ஆன்லைன் வகுப்பு படிப்பேன் என்றால் எனது தாத்தாவின் கைப்பேசியிலிருந்து படிப்பேன். 108 ஆம்புலன்ஸில் எனது தாத்தா, பாட்டியுடன் மருத்துவமனைக்கு சென்றபோது, யாருடைய கைப்பேசியிலிருந்து எனது பெற்றோருக்கு தகவல் சொன்னேன் என்றால் நான் வைத்திருந்த என்னுடைய கைப்பேசியிலிருந்து தகவல் சொன்னேன். 108 ஆம்புலன்ஸில் தாத்தா, பாட்டியை ஏற்றும்போது, போலீசார் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை.

6. ஆம்புலன்ஸில் யார் யார் சென்றோம் என்றால் நான், எனது பாட்டி, தாத்தா ஆகியோர் சென்றோம். போலீசார் என்னை மருத்துவமனையில் என் பெற்றோர்கள் வருவதற்கு முன்பு விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னதை போலீசார் கைப்பட எழுதிக்கொண்டார்களா என்றால் என் அம்மாச்சி சொல்ல எனது அம்மா புகாரை எழுதினார். எனது அம்மா எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் காலை 9.30 மணிக்கு வந்தார். சம்பவத்திற்கு முன்பு புகை மூட்டல் சம்பந்தமாக எதிரிக்கும், எனது தாத்தா, பாட்டிக்கும் பிரச்சனை இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பிரச்சனையின்போது எதிரியின் கைப்பேசி உடைந்துவிட்டது என்றாலும், உடைந்த கைப்பேசியை சரிசெய்து கொடுக்காததால் எதிரியும், எனது தாத்தா, பாட்டியும் பேசினார்கள் என்றால் இல்லை. எதிரியிடம் கைப்பேசி இல்லை. போலீசார் விசாரணையின்போது எனது தாயார் புகாரை எழுதியபோது யார் யார் இருந்தார்கள் என்றால் எனது பாட்டி, அம்மா, அப்பா, அக்கா ஆகியோர் இருந்தார்கள்.

7. எனது தாத்தா நல்லநிலையில் இருந்தாரா என்றால் மயக்கத்தில் இருந்தார், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்தார். நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எதிரி கத்தியால் எனது தாத்தாவை குத்தவில்லை

என்றாலும் சரியல்ல. ஏற்கனவே இருந்த பிரச்சனையின் தொடர்ச்சியாக புனையப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. ஆன்லைன் வகுப்பை எனது தாத்தா கைப்பேசியிலிருந்து படித்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட கைப்பேசி இருக்கும்போது, எனது தாத்தாவின் கைப்பேசியில் ஆன்லைன் வகுப்பு படித்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட கைப்பேசி இருந்தால் அதன் எண்ணை குறிப்பிட்டிருப்பேன், அவ்வாறு கைப்பேசி இல்லாததால் எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

8. சம்பவ சமயத்திலும், மருத்துவமனையிலும் நான் இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு மாரடைப்பிற்கு ஆஞ்சியோபிளாஸ்ட் சிகிச்சை செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சம்பவத்தின் பின்பு எனது தாத்தா இருதய நோய்க்கு மாத்திரை எடுத்துவந்தார் என்றால் இல்லை. எனது தாத்தா வயதுமூப்பின் காரணமாகவும், இருதய நோய் காரணமாகவும் இறந்தார் என்றாலும், சம்பவத்தின்போது ஏற்பட்ட காயத்தினால் இறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன காயங்கள் எதிரியால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது எனது தாத்தா தான் அரிவாள் எடுத்து எதிரியை வெட்ட வந்தார் என்றாலும், அப்போது தடுக்கி விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.04 17:58:55 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
04.02.2026